**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 56/2025 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. லட்சுமணன் |
| Husband/Father Name | பாளையம் |
| Village /Area | மேல்பாக்கம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 27 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 26.08.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு பருத்திபுத்தூர் கிராமத்தில் திருவிழா நடைபெற்றது. இரவு திருவிழாவில் கும்பலாக இருந்தார்கள். அங்கு சண்டை போட்டுக் கொண்டிருந்த நபர்கள் என்னை கத்தியால் தாக்கினார்கள். அரக்கோணம் அரசு மருத்துவமனையில் என்னை சிகிச்சைக்காக அனுமதித்தார்கள். மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் நான் அங்கு 1 மாதம் சிகிச்சை பெற்றேன். ஆஜர் எதிரிகள் மீது தான் நான் புகார் கொடுத்திருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை குத்துவதற்கு பயன்படுத்திய கத்தி நீதிமன்றத்தில் உள்ளதா என்றால் இல்லை. இது சம்பந்தமாக போலீசார்

என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவ நேரம் இரவு என்பதாலும் சம்பவ இடத்தில் ஜன நடமாட்டம் அதிகம் இருந்ததால் என்னை யார் குத்தினார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். புகாரில் என்ன விவரம் எழுதபட்டிருந்தது என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது. சந்தேகத்தின் பேரில் தான் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.08.28 15:36:00 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.